# கிழக்கில் படைமுகாம்களைப் பலப்படுத்த நடவடிக்கை

(மட்டுநகர்)

கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களையும், காவலரண்களையும் உசார் நிலையில் வைத்திருக்குமாறு இராணுவ உயர்பீடம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் எல்லைப்புறங்களிலுள்ள இராணுவ

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

கண்டுக்குளி சிவ நூலகம்


# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 11 இதழ் 166

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 26 — 07 — 199?


## பொலநறுவையில் காவலரண் மீது அதிரடி

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டத்திலுள்ள இராணுவ காவலரண் ஒன்றின்மீது கடந்த புதன்கிழமை இரவு தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலை புலிகள்நடத்திருக்கலாம் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலை முறியடிக்க வெளிடங்களிலிருந்து படையினர் அழைத்துவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## அடிப்படை வசதியின்றி 4000 குடும்பங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலங்களில் வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்தும் சட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளிலுமிருந்தும் இடம்பெயர்ந்த சுமார் 4000 குடும்பங்கள் போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

வலிகாமம் வடக்கு, வலி

(4-ம் பக்கம் பார்க்க)

★ அரசுக்கு எதிராக

# கறுப்பு எதிர்ப்பியக்கம் நடத்த எதிர்க்கட்சிகள் துரித ஏற்பாடு!

## 10 லட்சம் பேர் கலந்துகொள்வர்

(கொழும்பு)

அரசுக்கு எதிராக 'கறுப்பு எதிர்ப்பியக்கம்' நடத்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. இவ்வியக்கம் சுதந்திரக்கட்சி தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

அரசின் நடவடிக்கைகளை ஹர்த்தாலை நினைவு கூர்ந்தும் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி கண்டித்தும், 1953ம் ஆண்டு 'கறுப்பு எதிர்ப்பியக்க வாரம்'

(4-ம் பக்கம் பார்க்க)

## பார்ஸிலோனா நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நேற்று ஆரம்பமானது

(பார்ஸிலோனா)

உலகமே ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இலங்கை நேரப்படி நேற்றிரவு 11-30 மணிக்கு ஸ்பெயின் நாட்டின் பார்ஸிலோனா நகரில் ஆரம்பமானது.

மத்தியதரைக்கடலை பின்னணியாகக்கொண்டு, மலைகளுக்கிடையில் அமைந்து எழில்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து பாதிப்புறலாம்?

(கொழும்பு)

முப்படைத் தளபதிகளுக்கும் கூட்டுப்படைத் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலரிடையே ஏற்பட்டுள்ள பெரும் கருத்து முரண்பாட்டால் இராணுவ நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக இப்பிரச்னை மிக மோசமாகி வருவதால் படைத் தளபதிகளும் தமது நடவடிக்கையில் பெரும் தளர்வைக் காட்டி வருகிறார்களாம்.

தளபதிகளிடையே எழுந்த

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல் 4 படையினர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முகாம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக்காலை திடீர் தாக்குதல் மேற்கொண்டதாக அரசு தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் 4 படையினர் பலத்த காயமடைந்ததாகவும்தெரிவிக்கப்படுகிறது. (மா)

## பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

1991ம் ஆம் ஆண்டு விசேட க. பொ. த. (உ.த) பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 29-ம திகதி புதன்கிழமை சகல பாடசாலைகளிலும் வெளியிடப்படுமென யாழ். கல்வி அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சையின் முடிவுகளும் அடுத்த மாதம் 1-ம்

(4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் மீண்டும் ஜே. வி. பி. அச்சுறுத்தல்

(கொழும்பு)

தென்பகுதியில் மீண்டும் ஜே. வி. பியினரின் பயங்கரவாத நடவடிக்கைகள் தலையெடுக்கும் அறிகுறிகள் தென்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படாதவகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் அவர் மேலும் வலியுறுத்திக் கூறியுள்ளார். (சு)

## பிக்கு கொலை புலிகளுக்கு தொடர்பில்லை

(கொழும்பு)

தந்திரிமலையில் பிக்குகொல்லப்பட்டதற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று இராணுவ அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

தந்திரிமலை பிக்கு விமல ஞான தேரரின் மரணம் சம்

(4-ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் புனர்வாழ்விற்கு ஜெர்மன் அரசு உதவி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அகதிகளான மக்களின் புனர்வாழ்வுக்கென, ஜெர்மன் ஐக்கிய குடியரசு 10-மில்லியன ஜெர்மன் மார்க்கை அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக வழங்க முன்வந்துள்ளது

இப்பணம் கூடுதலாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தற்போது அகதிகளாக இருக்கும் தமிழ் மக்களின் புனர்வாழ்வுக்காக அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபர்களின் மேற்பார்வையில் பயன்படுத்தப்படும்.

(4ம் பக்கம்பார்க்க)

## அரச படைகளால் தமிழர்-முஸ்லீம் மோதலை தடுக்க முடியாதுள்ளது

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாக அரச படைகள் தெரிவித்தாலும் அங்கு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் மோதல்கள் நடப்பதை அவர்களால் தடுக்க முடியாதுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் இத்தகைய மோதல்களி

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் குழுவினராலும் கொழும்பில் பணம் பறிப்பு

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்களிடம் பணம் பறிக்கும் நடவடிக்கையில் அங்குள்ள தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களும் ஈடுபடுவதாக தெரியவருகிறது.

வெளிநாடுகளிலிருந்துவரும் தமிழர்களிடமும் மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து செல்பவர்களிடமுமே கூடுதலான பணம் பறிக்கப்படுகிறது.

புதிதாக கொழும்பு வரும் தமிழர்களை அடையாளம் கண்டு அவர்களைப் பின் தொடர்ந்து தனியிடத்தில் வைத்து மிரட்டி அவர்கள் சேமிருக்கும் பணம் அல்லது நகைகளைப் பறித்தெடுக்கிறார்

(4-ம் பக்கம் பார்க்க)

## மூன்று கப்பல்களில் உணவுப்பொருள் வருகிறது

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திற்கு வேண்டிய உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு அடுத்த மாதம் முதல்வாரத்தில் மூன்று கப்பல்கள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு செல்லவுள்ளது என்று புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநல அமைச்சின் செயலாளர் திரு. கிறிஸ்டி சில்வா, நேற்று முன் தினம் கொழும்பில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர்

(4-ம் பக்கம் பார்க்க)

**வீணாகும் தண்ணீர் - நம் வாழ்நாளில் கண்ணீர்**

# வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம். எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6448)

### தரன் ஸ்ருடியோ

அவசரமாக, றபர் சீல்கள் பாஸ்போட், அடையாள அட்டைகள் மற்றும் கலர் படங்களுக்கும் விளம்பர போட் எழுதுவதற்கும். தரன் ஸ்ருடியோ, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6523)

### உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்

நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகளும், றேடியோக்களும் வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (சி-6570)

### பரீட்சை (ஆண்டு-4, 5)

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு-5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 26-07-92 ஞாயிறு மு. ப. 7-00 மு.ப. 10மணிநேரங்களிலும் ஆண்டு4பரீட்சை01-08-92 சனி மு. ப. 8 மணி மு.ப11.00 மணி நேரங்களிலும் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6574)

### வைத்தியம்

செங்கண்மாரி, கூடற்புண், தொய்வு வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தங்காம அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணை வைத்தியா சி இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

### பல் கட்டுமிடம்

உங்கள் பற்களை குறைந்த விலையில் ஒரே நாளில் கட்டி செல்வதற்கும் கண்களை பரிசோதனை செய்து கண்ணாடி எடுப்பதற்கும் சிறந்த ஸ்தாபனம். D.சேனாதிராஜா M.H. D I., இல 146 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-6585]

### கல்வி

G. C. E. (O/L)ல் சட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 2 மாதத்தில் தொடர் 40 மணித்தியாலயங்களில் அதி உயர் விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (சி 6586)

### ஜோதிடம்-விஞ்ஞானம் கணிப்புக்கள்

செவ்வாய் இடபராசியிலிருந்து 31-8-92 வரை வியாழனை நோக்குவதால் சிவில் யுத்தங்கள், இந்து-மூஸ்லிம் கலவரங்கள், குண்டு வெடிப்புகள், எரிமலை, ரயில், விமான விபத்துக்கள், ஈராக் மீது மீண்டும் அமெரிக்காவின் தாக்குதல்கள் இராணுவ அழுத்தங்கள் ஏற்படும் (கடந்த வருடம் 7½ மாதங்களாக இதே இடப ராசியில் வக்கிர சஞ்சாரத்தால் வளைகுடா யுத்தம் மூண்டது. Prof சத்தியதாஸன், (பத்து வீட்டுத் திட்டம்), கட்டுடை. (சி 6587)

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சனை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில வரவும். டலன் தவறினால் பணம் திரும்பப்பெறலாம். ஸ்ரீசக்தி கணேஷ் உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 95, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி), நல்லூர். [சி 6589]

## சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாகவுள்ள கடையொன்றின் வாசலில் நிறுத்தப்பட்டிருந்த 'லுமாலா' லேடீஸ் சைக்கிள் கடந்த செவ்வாய்க்கிழமையன்று திருட்டுப் போயுள்ளது.

தெல்லிப்பழை பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சில்லாலையில் வசித்துவரும் யுவதி ஒருவரின் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. [72]

## ஈராக் மீது தடை அமெரிக்கா முயற்சி

(நியுயோர்க்)

ஈராக்கிற்கு எதிரான சகல தடைகளையும மேற்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும அமெரிக்கா மேற்கொள்ளும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் சவூதியில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் போர் நிறுத்த ஏற்பாடுகளுக்கு ஈராக் பணியாவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்க விருப்பதாக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உட்பட நேசநாடுகள் எச்சரிக்கை விடுக்கவுள்ளதாக உயர்அதிகாரி ஒருவர் அமெரிக்காவில் கருத்து வெளியிட்டுள்ளார். (க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

சித்த மருத்துவப் பிரிவிற்கு 1991 - 92 ஆம் ஆண்டிற்கான

**புதிய மாணவர்களை அனுமதித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப் பிரிவிற்கு பி. எஸ் எம் எஸ். பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

[அ] 1988, 1989, 1990 ஆகஸ்ட் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதீகவியல, தாவரவியல், விலங்கியல ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31-ஆம் திகதியன்று 17வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

31 - 08 - 1992 - ல் மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் யாவுமுடையவராக இருத்தல் வேண்டும். மேற்கூறப்பட்டவைக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் உதவிப்பதிவாளர் '(தேர்வுகளும், அனுமதிகளும்)(தேர்வுக் கிளை, அவர்களிடமிருந்து ரூபா 10 செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23 x 10 செ.மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு விலாசமிட்டு, ரூபா 10 க்கான காசுக்கட்டளையை, நிதியாளர், யாழ் பல்கலைக் கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்டு அத்துடன் அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி: 31 - 08 - 1992.

பதிவாளர்.

ஏ-2324

## சுகாதார நிறுவனங்களுக்கு பணிப்பாளர் நேரடி விஜயம்

(பண்டத்தரிப்பு)

யாழ். பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசடாபதி தமது பிராந்தியத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் மற்றும் சுகாதார திணைக்கள நிறுவனங்களுக்கும் நேரடியாக விஜயம் செய்து பரிசோதனைகளை நடாத்தி வருகின்றார்.

ஊழியர்கள் கடமை நேரத்தில உத்தியோகபூர்வ சீருடையில் கடமையாற்றவேண்டும் என்றும், திணைக்கள அடையாள அட்டை அணிந்திருக்கவேண்டும் என்றும் அவர் பணிப்புரை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது (72)

## இராசி பலன்

**26-07-1992**

**(ஞாயிற்றுக்கிழமை)**

**(தமிழுக்கு ஆடி 11)**

ஏகாதசி முற்பகல் 9-45 வரை, ரோகிணி பிற்பகல் 1-09 வரை, ஏகாதசி விரதம். இராகுகாலம் பிற்பகல் 4 32 முதல் 6-02 வரை சுபநேரம் காலை 9-02 முதல் 10-32 வரை.

மேடம்; நோய் காரணமாக மகிழ்ச்சிக் குறைவு, பண முடை, அலைச்சல.

இடபம்: குடும்பத்தில் சுப காரியம், உறவினர் அனுகூலம், பணம் வரவு

மிதுனம்: மனைவி வெறுப்பு கருத்து முரண்பாடு, மனச் சுமை.

கடகம்: செல்வந்தர் உதவி, முயற்சி வெற்றி, நன்மதிப்பு.

சிங்கம்: நற்கீர்த்தி, எழுத் தாற்றல், கற்பனையான பயம்.

கன்னி: கெட்ட பெயர், கைப்பொருள் இழப்பு, யோசனை.

துலாம்: தொழில் சிரமம், வீண் கலகம், குடும்ப சலனம்.

விருச்சிகம்: எதிர்பாராத திருப்பம், வாக்குச் சுகம், தாய் அன்பு.

தனுசு: எதிரிகள் ஒத்துழைப்பு, தொழிற் சிறப்பு, குடும்ப உல்லாசம்.

மகரம்: அயலவர் துன்பம், பணம் பாதிப்பு, சடும் சினம்.

கும்பம், குடும்பப் பிரிவு, பண நஷ்டம், கௌரவக குறைவு.

(3-ம் பக்கம் பார்க்க)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எடுக்கும் காரைநகர் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களுக்கு யாழ். நாவலர் மகா வித்தியாலயத்திலும் வட்டுதிருஞானசம்பந்த வித்தியாலயத்திலும், சுளிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் ஒரு போட்டிப் பரீட்சைப் அடுத்த மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## நிவாரண அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களுக்கு வெளியே வாழும் மக்களது நிவாரண அட்டைகள் சம்பந்தமான தகவல்கள் தாங்கள் தங்கி வாழும் கிராம சேவையாளரை அணுகி அறிந்துகொள்ளலாம் என யாழ். செயலக திட்டப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

யூலை மாதத்துக்கான முதல் இரண்டு கட்ட நிவாரணங்களும், நிவாரண அட்டைகள இன்றி இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்டுவருகின்றது எனவும் செயலகத் திட்டப்பிரிவு அதிகாரிகள் மேலும்தெரிவித்தனர் (சு-மT)


வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

நடாத்திய

தையல், தட்டச்சுப் பயிற்சிநெறிப் பூர்த்தியையொட்டிய

**கண்காட்சியும் - விற்பனையும்**

**கண்காட்சி:**

28-07-92 செவ்வாய் காலை 9 மணி முதல் 5 மணி வரை.
29-07-92 புதன் காலை 9 மணி முதல் 5 மணி வரை.

**விற்பனை:**

30-07-92 வியாழன் காலை 9 மணி முதல் 5 மணி வரை.

**சான்றிதழ் வழங்கல்:**

01-08-92 சனி காலை 9 மணிக்கு.

**இடம்: சங்கப் பயிற்சி நிலையம்.**

எம்மால் நடாத்தப்படும் கண்காட்சி விழாவிலும், விற்பனையிலும், சான்றிதழ் வழங்கும் வைபவத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:

நிர்வாக சபையினர்,
(ஏ 2315) ஆசிரியர்கள், பயிற்சி மாணவர்கள்.



School of Fine Arts

**கவின் கலைகள் பயிலகம்**

2-வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சி

**"கலைக்கதம்பம்"**

காலம்: ஜுலை 26, 27 (ஞாயிறு, திங்கள்) 1992
மாலை 6 மணி

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

26-07-92 தலைமை:

திரு. சி. வேலாயுதம் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

27-07-92 தலைமை:

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்
(யாழ். பல்கலைக்கழகம்)

பிரவேசம் இலவசம்

V. J. கொன்ஸ்ரன்ரைன்
(பொதுச்செயலாளர்)

திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (ஏ 2323)

# உலர்உணவு அட்டைகள் சங்கானையில் விநியோகம்

(மானிப்பாய்)

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியுள்ள தீவக மக்களை அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண அட்டைகள் மேற்படி கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (71)

# ஒன்றேகால் லட்சம் அகதிகளை அமெரிக்கா அனுமதிக்கும்

(நியுயோர்க்)

சுமார் ஒரு லட்சத்தி 32 ஆயிரம் அகதிகளை அடுத்த ஆண்டு முதல் அமெரிக்காவில் அனுமதிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் திட்டமிட்டு வருவதாக உதவி வெளிநாட்டமைச்சர லோறன்ஸ் ஈகிள் கோ்ணியா தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஆசியா மற்றும் முன்னாள் சோவியத் யூனியனை சேர்ந்த அகதிகளே இவ்வாறு குடியமர்த்தப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக உலகின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகெங்கிலும் தற்போது ஒன்றேமுக்கால் கோடி அகதிகள் இருப்பதாகவும் தெரியவருகிறது. (க)

## க. பொ. த. (உயர்தரம்) பரீட்சை
# பளை மாணவர்கள் யாழ். நகரில் தோற்றலாம்

(கொழும்பு)

அடுத்த மாதம் 1ம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த் (உயர்தரம்) பரீட்சைக்கு பளை உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் பரீட்சை எழுத ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அண்மையில் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக மேற்படி பகுதியில் உள்ள பரீட்சார்த்திகள் கஷ்டமுறுவதையடுத்தே மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளையில் வடபகுதிக்குரிய க. பொ. த. உயர்தர) வினாத்தாள்கள் 27ம் திகதி விமான மூலம் அனுப்பப்படும் என பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். (க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாவனையில் இருந்த கீழ்வரும் பொருட்கள் எதிர்வரும் 92-07-29ம் திகதி காலை 10 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திருநெல்வேலி வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுவோர் பொருட்களுக்கான மூழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருட்கள் அனைத்தையும் 92-07-29ம் திகதி மாலை 4. 00 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழக வளவில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

ஏலத்தில் விற்கப்படும் பொருட்களை பார்வையிட விரும்புவோர் 92-07-28ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப அலுவலகநேரத்தில் பல்கலைக்கழக நிதியாளரோடு தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

### ஏலத்தில் விற்கப்பட இருக்கும் பொருட்கள்

1. கூட்டல் இயந்திரம் - 02
2. கதிரைகள - அலுவலகம் - 03
   சாப்பாட்டு - 07
   உருக்கு - 01
3. கரட் உரஞ்சும தட்டு - 01
4. கேத்தில் - அலுமினியம் சாதாரணம் - 05
   மின்சாரம் - 03
5. வாளி - 05
6. தொற்று நீக்கி - 01
7. செற்றி கதிரை - இருவர் இருப்பது - 01
   ஒருவர் இருப்பது - 02
8. பாத்திரங்கள் - டேசின் - 09
   டட்டர் டிஸ் - 02
   செம்பு ஏ/சி - 01
   பீங்கான் - 06
   ரம்ளர் - 05
   இட்டலி சட்டி - 01
   தோசை கரணடி - 01
   இடியப்ப உரல் - 01
   தண்ணீர் பாத்திரம் - 02
   தேனீர் கோப்பை -09
   தேனீர் பீரிஸ் - 01
9. ஆட்டுக் கல்—01
10. மின்சார அடுப்பு—02
11. பழைய புதினப் பத்திரிகைகள்
12. கிளிப் அடிக்கும் இயந்திரம்—04
13. சிகரட் சாம்பல் தட்டு-01
14. துவிச்சக்கர வண்டி-01
15. ஓடை போடும் இயந்திரம்-12
16. அலுவலக கோவைத் தட்டு-01
17. தட்டச்சு இயந்திரம்-01
18. அருவாள்-01
19. ஆமைப்பூட்டு-03
20. சதுரங்க போட்டும் காய்களும்-01
21. பற்மின்ரன் றக்கற்-08
22. பற்மின்ரன் செற்-02
23. மேசைப்பந்து றக்கற்-05
24. கால் பந்து-01
25. ரியூப் லயிற் செற்-01
26. மணிக்கூடு -(மேசை) -01 (சுவர்)-2
27. கடம்-01
28. வயலின் பெட்டி-01
29. மண்வெட்டி-01
30. ஆய்வுகூட உபகரணம்-03
31. மேசை மின் விசிறி-02
32. மேசைக் கண்ணாடி-01
33. தண்ணீர் விடும் குழாய்-50 அடி
34. மேசை-02
35. போட்டோ பிரதி இயந்திரம்-02
36. கை கழுவும் பேசின்-01
37. மரப்பெட்டிகள்-
38. மரச்சிலாகையால் ஆன பெட்டிகள்
39. மரப்பெட்டி பலகைகள்
40. உத்தியோகத்தர்க்கான பாக்குகள்
41. அடிமட்டம்-03
42. கழிவு ஓயில்

ஏல விற்பனை நடாத்தும் உத்தியோகத்தர்களின் முடிவே இறுதியானது.

பதிவாளர்.

(எ- 2317) யாழ். பல்கலைக் கழகம்,

# அம்பகாமம் நீர்ப்பாசனக் குளம் திருத்தியமைப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் பகுதியிலுள்ள அம்பகாமம் நீர்ப்பாசன குள திருத்த வேலைகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் உள்கட்டு மாணப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

1990-ம் ஆண்டு பெய்த கடும் மழையின் காரணமாக இக்குளத்தின் இடதுபக்கக் கரையில் 100 அடி நீளத்திற்கு ஏற்பட்ட உடைவினைத் திருத்தங்களைக் திருத்துவதற்கான செலவாக 400,000/- ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திருத்த வேலையின் மூலம் கடந்த இரு வருடங்களாக நீர்ப்பாசன வசதியைப் பெற முடியாத நிலையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாதிருந்த 152 ஏச்கர் நிலப்பரப்பும் மீள பயிர்ச்செய்கைக்கான நீர்ப்பாசன வசதியைப் பெறுவதுடன், தொழில் பாதிக்கப்பட்டிருந்த பல விவசாயக் குடும்பங்களும் பயனடையவுள்ளன இக்குள திருத்த வேலைகள் கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இக்குளத்தினைத் திருத்துவதற்கு சிறிலங்கா அரசினால் எதுவித முயற்சிகளும் எடுக்கப்படாததினால் கடந்த இரு வருடங்களாக, சிறுபோக விவசாய முயற்சிகள் இப்பகுதியில் பெரும் பாதிப்படைந்திருந்தன. இந்நிலையிலேயே தமிழீழ ஆய்வு நிறுவனம் இக்குளத்தினைத் திருததுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மேலும் சென்ற வருட இறுதியில் முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள மதுவாளசிங்கன் குளத் திருத்த வேலைகளும், கிளிநொச்சிப் பிரதேசத்தில் கறுப்பிக் குள புனரமைப்பும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் மேற்கொளளப்படடதும, மதவாள சிங்கன் குளம் திருத்தப்பட்டதனால் 400 ஏக்கர் நிலப்பரப்பு நீர்ப்பாசன வசதியைப் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இராசிபலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மீனம்: மனம் திடசித்தம், பொருள் வரவு, தொழில் பாராட்டு,

— ஜோஸ்யர்

# உணவுப் பொருளுடன் மேலதிக கப்பல் வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிற்கு தேவையான உணவுப்பொருட்களுடன் மேலதிககப்பல் ஒன்று ஆகஸ்ட் 15ம் திகதி பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தற்போது கொழும்பில் தங்கி நிற்கும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

யாழ். குடாநாட்டு உணவு நிலை தொடர்பாக அரச அதிபர் கொழும்பில் புனர்வாழ்வு அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை தொடர்ந்து இக்கப்பலில் உணவுப்பொருட்கள் எடுத்துவரப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (மா)

# இன்று

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இன்று 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தில் அதிபர் சின்னத்தம்பி டாஸ் தலைமையில் பழைய மாணவர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

0 0 0

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று 26 ம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

0 0 0

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை கலை இலக்கியக்களம் கலாகேசரி ஆ. தம்பித்துரைக்கு நடாத்தும் பாராட்டு விழா இன்று 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

குருநகர் விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் இரு காட்சி உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெறவுள்ளன.

3-15 மணிக்கு அராலி அண்ணா விளையாட்டு கழகத்தை எதிர்த்து பாடும் மீன் 'பி' அணியும் 4-15 மணிக்கு இளவாலை யங் ஹென்றீசியன் அணியை எதிர்த்து பாடும் மீன் 'ஏ' அணியும் மோதவுள்ளன.

# வலுவிழந்தவர்களுக்கு நாம் உதவ வேண்டும்

(மானிப்பாய்)

வலுவிழந்தோர் கல்வி கற்பதுடன் நின்றுவிடாமல் தொழிற்கல்வியையும் பயின்று அதில் தேர்ச்சியடையவேண்டும். இவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக திகழவேண்டுமென்பதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள சமூக சேவைகள் பகுதியினரும் வலிந்துதவும் சமூக சேவை ஒழுங்கமைப்புகளும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு யாழ். மாவட்ட சிரேஷ்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் திரு. அ. இராமநாதன் கடந்த புதன் 22ந் திகதி மாலை கொக்குவில் சாயிசமித்தி இணுவில் நம்பிக்கை இல்லத்திலுள்ள வலுவிழந்தோருக்கு பஜனையும் இராப்போசனமும் அளித்த வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

நல்லூர் பகுதி சமூக சேவைகள் உத்தியோகத்தரும் கொக்குவில் சாயி சமித்தி தலைவருமான திரு. க. வை. சிவநேசனினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் இல்லச் சிறுவர் சிறுமியர்களுக்கு இராப்போசனம் வழங்கப்பட்டது. (71)

# கந்தலம ஹோட்டல் திட்டம் மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கந்தலம பகுதியில் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தஉல்லாசப்பிரயாண ஹோட்டல் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாக உல்லாசப்பிரயாணத்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஹோட்டல் கட்டும் திட்டத்துக்கு மதவாதிகள் அண்மையில் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

# எயிட்ஸ், மஞ்சள்காமாலை நோய்களினால் உலகில் வருடந்தோறும் 20 லட்சம் பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

மஞ்சள் காமாலை நோயினாலும் எய்ட்ஸ் வைரஸ் நோயினாலும் உலகநாடுகளில் வருடாந்தம் 20 லட்சத்திற்கு அதிகமானோர் உயிரிழக்கின்றனர்.

தகுந்த முறையில் சுத்திகரிக்கப்படாத ஊசிகள், ஏனைய கூரான உபகரணங்கள் போன்றவற்றின் மூலம் மஞ்சள்காமாலை எய்ட்ஸ் வைரஸ் நோய் கிருமிகள் தொற்றக்கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு நோய்களும் தொற்றுவதையும் பரவுவதையும் தடுப்பதற்கு ஆஸ்பத்திரிகளிலும் ஏனைய வைத்திய நிறுவனங்களிலும் ஒருமுறை பாவித்தபின் எறிந்துவிடக்கூடிய ஊசிகளை பாவிப்பதே சிறந்த முறையாகும் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (மா)

---

# அயோத்தி கட்டுமானப்பணி இன்று நிறுத்தப்படவுள்ளது

(லக்னோ)

அயோத்தியாவில் அடிக்கல் நாட்டப்பட்ட பகுதியில் நடைபெறும் கட்டுமானப் பணி இன்று காலை நிறுத்தப்படவுள்ளது.

ராமர் ஜென்மபூமி, பாபர் மசூதி பிரச்னைக்கு குறிப்பிட்ட வரையறையிலான காலத்திற்குள் தீர்வு காண பிரதமர் நரசிம்மராவ் உறுதி அளித்ததை அடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மாத காலத்தினுள் இந்த பிரச்னையை தீர்த்து வைக்குமாறு விஸ்வஹிந்து பரிசத் அரசிடம் தெரிவித்துள்ளது. (கே)

---

## அரச திணைக்களங்களில் எழுதுவினைஞர் வெற்றிடம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான அரச திணைக்களங்களில் எழுதுவினைஞர்கள் பதவி வெற்றிடங்கள் இன்றுவரை நிரப்பப்படவில்லை.

யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகள், அரசினர் வைத்தியசாலைகள், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், அஞ்சல் அலுவலகங்கள், சில அரசினர் கல்லூரிகள் ஆகியனவற்றில் எழுதுவினைஞர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்படவில்லை. (154)

---

## இந். ஜனாதிபதி பதவியேற்பு

புதுடில்லி

இந்தியாவின் 9-வது ஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா நேற்று பதவி ஏற்றார்.

இப்பதவியேற்பு வைபவத்தில் பிரதமர் நரசிம்மராவ் அவரது அமைச்சர்கள், மக்களவை, மாநில அவை தலைவர்களும், மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள், ராஜீய பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (கே)

---

## சிப்பாய் பலி

(கொழும்பு)

திருகோணமலை இராணுவ முகாமிலுள்ள பங்கரில் நேற்று கிரனேட் வெடித்ததில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். இரண்டு படையினர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

---

## இடம் பெயர் சேவை

[திருநெல்வேலி]

யாழ்ப்பாணக் கோட்டக் கல்வி அலுவலக இடம் பெயர் சேவை நாளை 27-ந் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதன்போது ஆசிரியர்களின் நிலுவை, விதவைகள், அனாதைகள் கணக்கு இலக்கம், சம்பள ஏற்றம் முதலிய பல பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காணப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

# "படைகளின் கொடுமைகள் மத்தியிலும் தென் தமிழீழத்தில் புலிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டு வருகிறது

\- இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

தென் தமிழீழத்தில் அரச படைகளின் கொடுமைகளுக்கு மத்தியிலும் அங்குள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்து வருகிறார்கள் என்று நேற்று யாழ்ப்பாணம் நாவாந்துறை நீகன் நகரில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவு மண்டபம் திறந்து வைக்கப்பட்டதையடுத்து சிறப்புரையாற்றிய யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

அவர்தொடர்ந்துஉரையாற்றுகையில்தென்தமிழீழ மக்கள் அரசினால் விதிக்கப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அரச படைகளின் கொடுமைகள் ஆகியனவற்றிற்கு மத்தியிலும் முழுமையாக புலிகளுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். பெரும் சுமைகள் துயரங்களுக்கு மத்தியில் அம்மக்கள் ஆதரவை வழங்கி வருகிறார்கள். அங்கு பங்களிப்பு அர்ப்பணிப்பு அதிகரித்துள்ளது.

தென் தமிழீழம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில் அங்குள்ள மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவற்றிற்கு மத்தியில் விடுதலைப்புலிகள் தாக்குதலை நடாத்துகிறார்கள்.

அங்குள்ள மக்களை இராணுவம் சுற்றிவளைத்து தினமும் படுகொலை செய்துவருகிறது. அவர்கள் சோர்ந்து போகாமல், மனம்தளராமல் பங்களிப்பும் அர்ப்பணிப்பும் மேலோங்கி நிற்கிறது.

போராட்டவேகமும், வளர்ச்சியும் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. சுதந்திரவேட்கையுடன் அவர்கள் காணப்படுகிறார்கள்.

போராளிகள் மாவீரர்களாகிறார்கள் அவர்களின் கல்லறைகளை ஒவ்வொருபெற்றோர்களும் மக்களும் பார்க்கவேண்டும். அதனைப்பார்த்து மக்கள் மலரஞ்சலிசெலுத்த வேண்டும் என்ற உணர்வு இருக்கும். இவற்றினைப் பார்க்கும்போது உண்மையிலேயே இது மக்களை சிந்திக்கவைக்கும். போராட்டத்தில் இணைவதற்கு உறுதியையும் கொடுக்கும் என்றார். (56)

---

## மூன்று கப்பல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கொழும்பில் நடாத்திய பேச்சுக்களின் பின்பே இந்த மூன்று கப்பல்களும் உடனடியாக பருத்தித்துறைக்கு அனுப்பப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தில் உணவுப்பொருட்களை தற்போது ஏற்றிக்கொண்டிருக்கும் இரு கப்பல்கள் முதலில் புறப்படுச்செல்லும் என்றும் பின்பு மூன்றாவது கப்பல் புறப்படுமென்றும் கிறிஸ்டி சில்வா மேலும் தெரிவித்தார். (வி)

---

## பார்ஸிலோனா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகு தேவாலயங்கள் அழகு செய்ய, பிகாசோ போன்ற உலகப் புகழ்பெற்ற ஓவியங்கள் அழகுசெய்த பார்ஸிலோனாவில் இந்த 25 வது ஒலிம்பிக் விளையாட்டு விழா ஆரம்பமானது.

உலகில் முதல் ஒலிம்பிக் போட்டி தொடங்கிய கிரீஸ் நாட்டிலிருந்து ஒலிம்பிக் ஜோதி எடுத்துவரப்பட்டு பார்ஸிலோனா பிரதான விளையாட்டரங்கின் உச்சியில் ஏற்றப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கண்ணைக் கவரும் இரவைப் பகலாக்கும் வாண வேடிக்கைகளும் அங்கு இடம்பெற்றன.

15 நாட்களுக்கு நடக்கவிருக்கும் இந்த விளையாட்டுப் போட்டிகளில் 172 நாடுகளைச் சேர்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளுமாக சுமார் 15 ஆயிரம்பேர் பங்கேற்கவுள்ளனர். (கே)

---

## அகதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஜெர்மன் அரச அதிகாரிகளுடன் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் நிமித்தமே மேற்படி நிதியுதவி கிடைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

---

## கிரிக்கெட் இறுதியாட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சீ.சீ.சீ கழகம் நடாத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

40 ஓவர்களைக் கொண்ட இவ் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதுகின்றது. பல்கலைக்கழக அணிக்கு கே. கணேசநாதனும், ஜொனியன்ஸ் அணிக்கு சி. சூரியகுமாரும் தலைமை தாங்குகின்றனர்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. பஞ்சலிங்கம் கலந்துகொள்வார். (சி)

---

## தமிழ் குழுவினராலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்.

இதேபோன்று கொழும்பில் உள்ள தமிழ் வர்த்தகர்களிடமும் கப்பம் அறவிடப்பட்டு வருகிறது.

தமிழ் குழுக்களின் உறுப்பினர்களாக இருந்து விலகியவர்களும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார்கள்.

இவர்களது நடவடிக்கைகளை கண்டும் காணாதது போல் கொழும்பு நகரில் சேவையில் ஈடுபட்டுவரும் பொலிசார் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின் பணம்பறிப்பு நடவடிக்கைகளால் கொழும்பிற்கு புதிதாக வரும் தமிழர்கள் அச்சத்துடன் நகரில் நடமாட வேண்டியுள்ளதாக அங்கிருந்து வந்தஒருவர் கூறினார்.

---

## கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்கள் காவலரண்கள்மீது எந்த நேரத்திலும் புலிகள் அதிரடித் தாக்குதலகள் நடத்தலாம் என்ற அச்ச நிலையிலிருப்பதால் அப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை விழிப்புடனிருக்குமாறு இராணுவத் தலைமையகம் எச்சரிக்கை செய்துள்ளது.

இதேவேளை இங்குள்ள இராணுவ முகாம்களை பலப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ் இராணுவ முகாம்களில் படையினரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவேண்டும். என்றும் இராணுவத்தினர் தமது தலைமையகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

---

# தொண்டாவிற்கு எதிராக துவேச பிரச்சாரம்

(கொழும்பு)

உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக சில பத்திரிகைகள் துவேஷத்தை கிளறி வருவதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

தம்புள்ளை கந்தலம ஹோட்டல் விவகாரத்துடன் அமைச்சர் தொண்டமானை சம்பந்தப்படுத்தியும் பௌத்த சிங்களவர்களுக்கு எதிராக அமைச்சர் தொண்டமான் இயங்குவதாக சில பத்திரிகைகள் செய்திகள் வெளியிடுவதாகவும் கூறப்படுகிறது. (மா)

---

## கால்போத்தல் தே. எண்ணெய்

(மானிப்பாய்

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளைகளில் குடும்ப அட்டைக்கு கால் போத்தல் தேங்காய் எண்ணை வீதம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. (71)

---

## அரசுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் 18ம்திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

'கறுப்பு எதிர்ப்பியக்கம்' ஆகஸ்ட் மாதம் முதல் செப்ரம்பர் மாதம் வரையும் ஏழு மாகாணங்களிலும் இடம் பெறவிருக்கிறது.

செப்டம்பர் கடைசி வாரத்தில் 10 இலட்சம் மக்களைக் கறுப்பு அங்கிகள் அணிந்தபடி கொழும்புக்கு அழைத்து மாபெரும் கறுப்பு இயக்கப் பேரணியை அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போராட்டத்தில் லலித், காமினி கட்சியும் கலந்துகொள்ளவள்ளன (மா)

---

## சங்காபிஷேகம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் தெற்கு ஞான வைரவர் கோவில் சங்காபிஷேகம் நாளை 27ம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது. (72)

---

## அடிப்படை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காமம் மேற்குப் பகுதிகளில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளினால் 10 ஆயிரம் வரையான குடும்பங்கள் இடம் பெயர்ந்திருந்தன.

இவர்களில் 3, 500 குடும்பங்கள் முகாம்களில் தங்கியிருந்தன.

மேலும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த 500 குடும்பங்கள் முகாங்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இருப்பினும் அடிப்படை வசதிகளான சுகாதாரம், மருத்துவ வசதிகளின்றி வாழ்ந்துவருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (கே)

---

## பரீட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி முதல் நடைபெறவிருக்கும் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குரிய முதல் பகுதி வினாத்தாள்களும் அடுத்த வாரம செவ்வாய்க்கிழமை யாழ்.கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துவிடும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வி)

---

## பிக்கு கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பவித்த விதம் மர்மமாக இருக்கிறது.

அவர் இறந்த அறைக்கு வெளியே காவலர் ஒருவர் இருந்தும் அவர் எப்படிக் கொலைசெய்யப்பட்டார் என்பதனை அறிய முடியாதுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன (ரி)

---

## அரசபடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னால் 28 பேருக்குமேல் கொல்லப்பட்டுள்ளார்கள்.

தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இனப்பகை வளர்ந்து கொண்டேபோகிறது.

இரு பகுதினருக்குமிடையேயும் தொடர்ந்து மோசல்கள் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள்ஏற்பட்டு வருவதாக தெரியவருகிறது. (ரி)

---

## இராணுவ

(1ம பக்கத் தொடர்ச்சி)

மோதல்களிலேயே ஒபரேஷன் பலவேகய-2 தோல்வியடைந்ததாக 'ராவய' பத்திரிகை ஆசிரியர் திரு விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். (சி-மா)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8